## தவக்காலம் 2ஆம் வாரம் - ஞாயிறு

## முதல் ஆண்டு

### திருப்பலி முன்னுரை

இறைஇயேசுவில் அன்பிற்குரியவர்களே, இன்று தவக்காலத்தின் இரண்டாம் ஞாயிறு வழிபாட்டை சிறப்பிக்க வந்துள்ள உங்கள் அனைவருக்கும் இயேசுவின் இனிய நாமத்தில் அன்பான வணக்கங்கள்.

மலை - கடவுளும் மனிதரும் சந்திக்கும் இடமாக கருதப்பட்டது. மலைமீது இயேசு தோற்றம் மாறினார் என்பது கடவுளுக்கும், மனிதருக்கும் இடையே இயேசு பாலமாக விளங்கினார் என்பதைக் காட்டுகிறது. கூடாரங்கள். விவிலியத்தில் இறைப்பிரசன்னத்தின் அடையாளம். மலையில் இறைமாட்சியைக் கண்ட பேதுரு அத்தெய்வீகப் பிரசன்னம் தங்களோடு என்றும் தங்கியிருக்க விரும்பினார். இறைவன் நம்மோடு வாழும் தெய்வம். எனவே, பேதுரு மூவருக்கும் கூடாரம் அமைக்க விரும்பியதை இயேசு ஏற்கவில்லை. ஏனென்;றால், உயர்ந்த மலை, பேரொளி, பெரிய ஆட்கள் என அவருக்குப் பெருமை சேர்த்தது. மாறாக, அவர் தன் பாடுகள், மரணம் இவற்றால் மாட்சி அடைவதையே விரும்பினார். மாயச் சுகத்தில் அமைக்கும் கூடாரம் நிலைக்காது. உழைத்து உருவாக்கும் கூடாரமே இறைவன் விரும்புவதாகும்.

கடவுளின் பிரசன்னத்தில நாம் இருக்கும்போது அதில் ஒரு மகிழ்ச்சி உள்ளது. நம்மைத் தம் சாயலில் உருவாக்கி நம்மோடு எந்நாளும் உறைபவர் நம் கடவுள். அவரோடு நம்மை இறுகப் பிணைத்து இணைக்கின்ற ஒன்றிப்பு அனுபவம் நமக்குக் கிடைத்தால அத்தருணம் தொடர்ந்து நீடிக்க வேண்டுமென்பதே நம் எதிர்பார்ப்பு. உயாந்த மலையில் ஏற்பட்ட அனுபவம் சீடர்களை ஒருவிதத்தில் மாற்றம் அடையச் செய்கிறது. இயேசுவோடு நாமும் சென்று இறையனுபவம் பெற அழைக்கப்படுகின்றோம். நாம் பெற்ற அனுபவத்தை, அது நமக்குள் ஏற்படுத்திய தாக்கத்தை, மாற்றத்தை பிறரோடு பகிர்ந்து, கடவுளின் அன்புக்குச் சாட்சிகளாக செயல்படுவோம். இயேசுவின்; குரலுக்குச் செவிசாய்போம். இறைமகனின் குரலுக்கு எப்போதும் செவிசாய்க்க நம் இதயத்தை திறந்தருள வரம் வேண்டி இப்புனித திருப்பலியில் நம்மை முழுமையாக அர்ப்பணிப்போம்..

## மன்றாட்டுக்கள்:

*பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

1. “நல்ல ஆயன் நானே, நல்ல ஆயன் தன் ஆடுகளுக்காக தம் உயிரையே கொடுப்பான்” என்ற இயேசுவே,

இறைப்பணிக்காக தங்களையே அர்ப்பணித்த திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், அருட்சகோதரிகள், துறவிகள் அனைவரும் தங்கள் அர்ப்பணத்தின் மேன்மையை உணர்ந்து. எந்த பலவீனங்கள், வலுவின்மையில் வீழ்ந்திடாமல், உம் அருளால் அனைத்து சோதனைகளையும் வென்று, மக்களை நல்மனமாற்றத்திற்கு இட்டுச் செல்;லும் பணியை சிறப்பாக முன்னெடுத்துச் செய்வதற்கு வேண்டிய இறையாற்றலும், வல்லமையும், சக்தியும் தந்தருள வேண்டுமென்று, எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. “நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடமாட்டேன்” என்ற இயேசுவே,

தாய், தந்தை இழந்த பிள்ளைகள், பிள்ளைகளால் கைவிடப்பட்ட பெற்றோர்கள், சமூகத்தினால் ஒதுக்கப்பட்டவர்கள் அனைவரையும் உம்மிடம் ஒப்புக் கொடுக்கின்றோம். அவர்களின் உள்ளத்து தேவைகளை நீரே நிறைவு செய்யும். அவர்களின் மனக் கண்ணீரை நீரே மகிழ்ச்சியாக மாற்றும். அவர்களின் ஏக்கங்களை உம் அன்பினால் நிரப்பிடுமாறு, எங்கள்; ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக இறைவா, உம்மை மன்றாடுகின்றோம்.

3. “அமைதியை உங்களுக்கு விட்டுச் செல்கின்றேன், என் அமைதியையே உங்களுக்கு அளிக்கிறேன்” என்ற இயேசுவே,

இன்று பலரின் இல்லங்களிலும், உள்ளங்களிலும் அமைதி, நிம்மதியின்றி தவிக்கின்றனர். அமைதிக்காக, நிம்மதிக்காக எங்கெங்கோ செல்கின்றனர். போதை, மது போன்;ற தவறான வழிகளில் நிம்மதியை, அமைதியை தேடுகின்றனர். ஆனால், இறையமைதி உம்மிலேதான் இருக்கின்றது, அது உம்மிடம் மட்டுமே உள்ளது என்பதை உணர்ந்து, உம் இல்லம் நாடி வந்து, உம் நற்கருணை பிரசன்னத்தில் உம் உடனிருப்பின் வழியாக, நீர் தரும் அமைதியை பெற்றுக் கொள்ள, எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக, இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. “உயிர்த்தெழுதலும் வாழ்வும நானே, என்னில் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்” என்ற இயேசுவே,

எங்கள் குடும்பங்களில், உறவுகளில் இறந்தவர்களுக்கும். மற்றும் யாரும் நினையாத ஆன்மாக்களுக்கும் நீரே உம் அளவற்ற அன்பினால், பேரிரக்கத்தினால் அவர்களின் வாழ்வில் செய்த அனைத்து பாவங்களையும் மன்னித்து, அவர்களுக்கு உம் பேரின்ப வீட்டில் இடமளித்தருளும். உம்மை முகமுகமாய் தரிசித்து, உம்மைப் போற்றி, துதித்திட செய்தருள வேண்டுமென்று, எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

5. “உலகின் ஒளி நானே: என்னை பின்செல்பவர் இருளில் நடக்க மாட்டார்” என்ற இயேசுவே,

உம் சாயலையும், உயிர்மூச்சையும் தாங்கியிருக்கின்றோம் என வார்த்தையளவில் மட்டும் சொல்லிக் கொள்ளும் கிறிஸ்தவர்களாக இல்லாமல், பாவ வாழ்வின் நாட்டங்களை விட்டு விலகி, உம் வார்த்தையை வாழ்வாக்கி, எங்கள் பாவங்களை உம் திருமுன் அறிக்கையிட்டு, நல்ல மனமாற்றத்தை இத்தவக்காலத்தில் எங்கள் செபம், தவத்தினால் உம் அன்புக்குரிய பிள்ளைகளாக, உம் ஒளியின் பாதையில் வாழ்ந்திட வேண்டுமென்று, எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com